கேரள அரசு அதை பரிவோடு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதைப் பற்றி பேசுவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். கர்நாடகா அரசு என்ன கருத்து கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. மத்திய அமைச்சரிடம் சொல்லி இந்த மூன்று மாநிலங்களுடைய அதிகாரிகளையும் அமைச்சர்களையும் அழைத்துப் பேச வேண்டுமென்று நானும் நம் முதல் அமைச்சர் அவர்களும் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறோம். இதிலே என்ன முடிவு வருகிறது என்பதைப் பார்த்துக்கொண்டு மற்றபடி செய்யலாம். நாமே நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று அவர்கள் சொன்னார்கள். அப்படிச் செய்தால், அதற்கான திட்டத்திற்கு நிதி ஒதுக்க மாட்டார்கள். மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் சேர்ந்து போடுகின்ற திட்டத்திற்குத்தான் நிதி கிடைக்கும். நாம் சொந்தப் பணம் போட்டு செய்து கொள்ளலாம்; அதை யாரும் தடுக்க முடியாது.

[முற்பகல் 9—10]

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சண்முகா நதி காவிரியின் உப நதி என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதன் காரணமாக, சில திட்டங்கள் காவிரி நீர் ஒப்பந்தம் முடிவானதற்குப் பிறகு செய்யலாம் என்றும் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த நதிநீர் ஒப்பந்தம் முடிவு தெரியாமல் இருக்கின்ற நிலையில், மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து கூட்டுத் திட்டமாக ஒகனேகல் திட்டத்தைப்போல், மத்திய அரசே இந்தத் திட்டத்தை துவக்குவதற்கு ஏற்பாடு செய்ய, பங்கீடு பற்றி பிறகு முடிவெடுத்துக் கொள்ளலாம் என்று தமிழக அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு இதை நிறைவேற்ற வேண்டுமென்று நாம் வற்புறுத்தப் போவதில்லை. ஏனென்றால், நாம் சொல்வதில் நியாயம் இருக்கிறது. இந்த நியாயத்தைப் புரிந்து கொள்ளலாம்; மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளலாம். நாம் அதற்கான வழிவகை தேட வேண்டும்.

வாழைக்குளம் கண்மாய்ப் பகுதியிலுள்ள பனை ஏறும் தொழிலாளருக்கு மனைப்பட்டா வழங்கல்.

*வினா எண் 614—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவில்லிபுத்தூர் வட்டம், வாழைக்குளம் கண்மாய் உள்வாயில் பனை ஏறும் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைப்பட்டா கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

1981 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டத்திலுள்ள வாழைக்குளம் கண்மாய் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமானது. அக் கண்மாயில் சுமார் 15 ஏக்கர் நிலப் பரப்பில் 57 பனை ஏறும் தொழிலாளர்கள் ஆக்கிரமிப்பு செய்து, குடிசைகள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாழைக்குளம் கண்மாய்க்கு அருகில்தான் பனை ஏறும் தொழிலாளர்கள் வேலை செய்யும் பனை மரங்கள் இருக்கின்றன. அங்கேதான் அவர்கள் குடியிருப்பதற்கான சூழ்நிலை இருக்கிறது. 20 வருஷங்களுக்கு மேலாக அவர்கள் அரசாங்கத்திற்கு தண்டத் தீர்வை கட்டி குடியிருக்கிறார்கள். இந்தக் கண்மாய்க்கு வருகின்ற தண்ணீரால் அந்தக் குடிசைப் பகுதிகளுக்கு பாதிப்பு கிடையாது. அதுமட்டுமல்ல. இந்தக் கண்மாயில் கடந்த 20 வருஷங்களாக நீர் நிரம்பிக்கொண்டு வருகிறபோது, எவ்விதமான பாதிப்பும் இல்லாத காரணத்தினால், இந்த கண்மாய் புறம்போக்கை நத்தம் புறம்போக்காக மாற்றி அரசு இந்த 57 தொழிலாளர்களுக்கு பட்டா போட்டுக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்மாய் பொதுப் பணித் துறையைச் சார்ந்ததாக இருக்கிறது. அது மட்டுமல்ல. நீங்கள் சொல்கிற போதுகூட, 57 பேர்கள் 15 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிற போது ஒரு ஏக்கரிலே மூன்றே மூக்கால் குடிசைகள் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதிலே இருந்து ஆக்கிரமிப்பு எந்த அளவிற்கு இருக்கிறது என்பது நன்கு தெரிகிறது. அது மட்டுமல்ல. அந்தக் குடிசைகள் அந்தக் கண்மாய்க்குத் தண்ணீர் வருகின்ற ஆற்றின் படுகையில் போடப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதை பொதுப்பணித்துறை கண்டித்திருக்கிறது. ஆகவே, வேறு இடம் கொடுக்க வேண்டிய நிலையிலிருக்கிறது. இங்கே கொடுக்க வாய்ப்பில்லை என்று நான் கருதுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, ரெவின்யூ அதிகாரிகள் இதுவரையில் அதற்கு ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. 20 வருடங்களாக தண்டத் தீர்வை வசூல் பண்ணியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. இந்தக் கண்மாய்க்கு பாதிப்பு ஏற்படுகிறது என்று சொன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்தால், நான் நேரடியாகக் காண்பிக்கிறேன். எனவே மறுபடியும் இதைப் பற்றி பரிசீலனை செய்து, நேரடியாக கவனம் செலுத்தினால் நல்ல முடிவு எடுக்கலாம் என்பதால் அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 20 வருஷங்களாக அதைக் கொடுக்க முடியவில்லை என்று சொன்னால், அதில் எவ்வளவு சிக்கல் இருக்கிறது என்பது தெரிகிறது. இருந்தாலும், அதைப் பற்றி ஆராய்வதற்கு அரசு கடமைப்பட்டிருக்கிறது.

இடைநிலை தமிழ் ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு.

*வினா எண். 615—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

முதல் நிலை தமிழ் ஆசிரியராக தன் தகுதியை உயர்த்திக் கொண்ட இடைநிலை ஆசிரியர்களுக்கும் ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்க உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இக்கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியத்தை உயர்த்துவது எப்போது முதல் செயலுக்கு வரும்? அப்படி செயலுக்கு வருகின்ற தருவாயில் இடைநிலை ஆசிரியர்களுக்கு 20 ஆண்டுகள் ஊழிய காலத்திற்கு சிறப்புநிலை வழங்கவேண்டுமென்ற உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலை ஆசியர்களுக்கு புலவர் பட்டம் பெற்றால் ஊக்க ஊதியம் தரப்படுமா என்பது தான் மூலக்கேள்வி. அது பரிசீலனையில் இருக்கிறது என்று பதில் சொல்லியிருக்கிறேன். பரிசீலனை முடிந்த பின் முடிவிற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். மேற்கொண்டு எதுவும் சொல்வதற்கில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு பேருந்திலே கல்விப் பயணம் செய்ய அரைக் கட்டண சலுகை வழங்கும் உத்தேசம் அரசிற்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.